

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## மங்களம்! சுப சோபன மங்களம்!!

நாத்திகர்கள் தவிர, சகல ஜனங்களுக்கும் குறைந்தது ஓர் தெய்வம் உண்டு! "ஒன்றான மெய் தேவனை" பெற்ற தேவ ஜனமோ, இன்னும் நாத்திகர்களைப் போலவே, வாழ்வது துயரம்! ஏனெனில், தேவனும் இவர்கள் பெற்ற இரட்சகரும் இவர்களை நடத்தும் ஆண்டவராய் இல்லை! என்ற துர்பாக்கியமே.

ஆம், சர்வ வல்ல தேவாதி தேவனை தங்கள் 'கர்த்தராய்' (LORD-ஆண்டவராய்) கொண்டவர்களே, அவரது சொந்த ஜனமாய் இருக்கும் பாக்கியம் பெற்றவர்கள்! என சங்கீதம்.100:7,8 வசனங்கள் கூறுகிறது. இவர்களின் தேவன் "என்றென்றுமுள்ள சதா காலமும் அவர்களின் தேவன்! .....அவர்களை மரணபரியந்தமும் நடத்துவார்". இவ்வாறு, கர்த்தரை தங்கள் மேய்ப்பராய் கொண்டு, அவரின் மேய்ச்சலின் ஆடுகளாய் இருப்பவர்களின் பாத்திரமே நிரம்பி பொங்கும்! (சங்.23:5). ஒரு நாள் அல்ல, இந்த ஆண்டு 365 நாட்களும் பொங்கும்!

*-tr*

பெட்டகம் 20 | ஜனவரி 2018 | பரல்கள் 1



## “கொஞ்சத்தில் உண்மையே” பரலோக ராஜ்ஜிய வளர்ச்சிக்கு ஆரம்பம்!

“கொஞ்சத்தில் உண்மையாய் இருக்கும்” இந்த சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்துவதில் இயேசு எத்தனை மகிழ்ச்சியாயிருந்தார் என்பதை நாம் காணமுடிகிறது. அது எப்படியெனில், இயேசு தேவனுடைய ராஜ்ஜியத்தை குறிப்பிடும்போதெல்லாம் “சிறிய கடுகு விதைக்கு” ஒப்பிட்டார்! விசுவாசத்தைக் குறிப்பிடும் போதும் “சிறிய கடுகு விதைக்கு” ஒப்பிட்டார்! தேவனுடைய வார்த்தையைக் குறிப்பிடும் போதும் “சிறிய விதைக்கே” குறிப்பிட்டார்!

இவ்வாறு பரிபூரண ஜீவனின் மிகுதியான பலனும், தேவபக்தியின் மகத்துவமான வல்லமையும் “கொஞ்சத்தில் உண்மையாயிருக்கும்” ஜீவியத்திலிருந்துதான் வெளிப்படுகிறது என்பதைக் காண்பது, நம் உள்ளத்தை மிகுந்த பரவசம் கொள்ளச் செய்கிறது!

இதே சத்தியம் “உண்மையற்ற ஜீவியத்திற்கும்” பொருந்துவதாகவே உள்ளது. இதை இயேசு குறிப்பிடுகையில் “கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் (உண்மையல்லாதிருப்பவன்) அநேகத்திலும் அநீதியுள்ளவனாய் (உண்மையற்றவனாய்) இருக்கிறான்” என்றே கூறினார் (லூக்கா.16:10). “இது என்ன? சாதாரண விஷயம்தானே!” எனக் கூறுவதே இன்றைய உலகின் ‘கொஞ்சத்தில் கொண்ட’ மனப்பான்மையாயிருக்கிறது. ஆனால் இந்த கொஞ்ச விஷயத்தில் கொண்ட அசட்டையான கவனமின்மைதான் “உண்மையற்ற” ஜீவியத்தின் வீழ்ச்சிக்கு காரணம் என இயேசு எச்சரித்தார். இவ்வாறு இயேசு எச்சரித்த அதே தொனியில், அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில் “கொஞ்சம் புளித்தமாவு” எல்லா மாவையும் புளிக்கச் செய்துவிடும் என எச்சரித்தார்! (1 கொரி.5:6).

*-Ed*

### முக்கிய அறிவிப்பு

**2018 ‘பரலோக பொக்கிஷங்கள்’** வருட சந்தா ரூ.140/- M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் புதுப்பித்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி! புதுப்பிக்காதவர்கள் **ஜனவரி 15-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3** பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**800/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக்கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **‘புதிது’** என்று குறிப்பிடவும். நன்றி!

---

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

---


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## சம்பூர்ண ஆசீர்வாதத்திற்கு, சம்பூர்ண அர்ப்பணம் தேவை!

*நம்முடைய ஜீவியமாகிய சொந்த வீடாய் இருந்தாலும் அல்லது தேவனுடைய வீடாகிய சபையாய் இருந்தாலும்,"தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்..... உலகத்திலே விசுவாசிக்கப் பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்" என்ற இந்த சத்தியத்தை கண்டறிந்தவர்கள் மாத்திரமே ஓர் மெய்யான தேவபக்திக்குரிய வாழ்க்கையை வாழ்ந்திட முடியும்! (1தீமோத்தேயு.3:16).*

*இன்று மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர், இந்த தேவபக்தியின் இரகசியத்தை இன்னமும் அறியாத படியினால் தங்களுக்கானதையே தேடி இந்த உலகில் மாளுகிறார்கள். தங்கள் வசதி, தங்கள் பதவிஉயர்வு, பணத்திற்காக ஒரு ஸ்தலம் விட்டு வேறு ஸ்தலம் மாறுவது..... போன்ற தனக்கானதைத் தேடும் சுயநலத்தில் வாழ்பவர்கள் "மாம்சத்தில் வெளிப்பட்ட" இயேசுவை தரிசிக்க முடிவதில்லை! ஆகவே, தேவ பக்தியின் வாழ்க்கையும் இவர்களுக்கு தூரமாய் போய்விட்டது. தனக்கானதைத் தேடாமல் இந்த பூமிக்கு அடிமையின் ரூபமெடுத்து வந்த இயேசுவோ, தேவனையும் தேவனுக்குரியவைகளையும் சுதந்தரித்துக் கொண்டார்.*

**அதற்கு ஒரே காரணம் "பிதாவே என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்! உம்முடையவைகள் என்னுடையவைகள்" என அவர் தன்னலம் மறுத்த அர்ப்பணத்தின் இரகசியமேயாகும்! (யோவான்.17:10).**

*இவ்வாறு, மாம்சத்தில் வந்த இயேசுவைக் கண்டவனுக்கு தன்னைப் போலவே அவர் எல்லாவிதத்திலும்* **சோதிக்கப்பட்டார்..... ஆகிலும் பாவம் செய்யாதவராய் இருந்தார்!** *(எபிரெயர்.4:15) என்ற வசனம் அவனுக்கு உயிரோட்டமுள்ள ஓர் சவாலாய் அவன் முன்பு எப்பொழுதும் நிலை நிற்கும்! சவாலை ஏற்றுக்கொண்ட இவன், இயேசுவைப் போலவே ஜெயித்தும் வாழ்ந்து விடுவான்! தேவன் காண்பித்த இந்த மனுஷகுமாரனாகிய "இயேசுவின் வழியை" அறியாதவர்கள், வேறு எந்த விதத்திலும் தேவபக்தியின் வாழ்க்கையை சாதித்திட ஒருக்காலும் இயலாது!*

இவ்வாறு, என்னைப் போலவே மாம்சத்தில் வந்து சோதிக்கப்பட்டும் பாவம் செய்யாது வாழ்ந்த இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் பெற்றிடும் ஜெய வாழ்க்கையை "குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான வாழ்க்கை" என ரோமர் 8:29 கூறுகிறது. இவர்களே, அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் எனவும் 28-ம் வசனம் எடுத்துரைக்கிறது. ஆண்டவராகிய இயேசு உயிர்த்தெழும்வரை, பிதாவுக்கு ஏக புத்திரனான ஒரே ஒரு குமாரன் மாத்திரமே இருந்தார்! ஆனால் இயேசு உயிர்த்தெழுந்தப் பிறகு, மகதலேனாமரியாளைப் பார்த்து "**மரியாளே, நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் ஏறிப்போகிறேன்**" எனக் கூறினார்(யோவான்20:17). தன் சொந்த பிதா, அவர்களுக்கும் பிதா என இயேசு குறிப்பிட்ட முதல் இடம் இதுதான். இயேசு தன் சீஷர்களை முதலாவதாய் "**ஊழியக்காரர்கள்**" (Servants) என்றே அழைத்தார். பின்பு அவர் "இனி நான் உங்களை ஊழியக்காரன் என்று சொல்லு கிறதில்லை.... உங்களை **சிநேகிதர்** (Friends) என்றே அழைப்பேன்" (யோவான்.15:15) எனக் கூறினார். இதற்கு பின்புதான், யோவான்.20:17-ல் அவர்களையும் தனக்கு சமமாக "**தேவனுடைய குமாரர்**" (Sons) என அழைத்தார்.

**இன்று உலகில் 'தேவனுடைய ஊழியன்' என்பதை மேன்மையாக எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையில் நீங்கள் தேவனுடைய குமாரனாய் இருப்பதே அதிக மேன்மையுள்ளதாய் இருக்கிறது!**

உங்கள் வீட்டில் இருக்கும் வேலைக்காரன் அல்ல, உங்கள் குமாரனையே நீங்கள் மேன்மையாக எண்ணுவீர்கள். தேவனுடைய பார்வையிலும், இவ்வாறு "குமாரனுடைய சாயலுக்கு" மாறும்படி தங்களை ஒப்புக் கொடுத்தவர்களையே தேவனும் அதிகமாய் விரும்புகிறார்!

உங்கள் வீட்டில் நான்கு குமாரர்கள் இருந்தால், அவர்கள் நான்கு பேரையும் ஒரே விதமாய் நேசிப்பீர்கள். உங்கள் மூத்த மகனுக்கு என்ன நன்மை செய்வீர்களோ, அதே நன்மையை உங்கள் இளைய மகனுக்கும் செய்வீர்கள். இங்குதான் நம்மை ஆறுதல்படுத்தும் ஓர் மிகப்பெரிய சத்தியம் அடங்கியிருக்கிறது. "இயேசுவுக்கு" (முதல்பேரான மூத்த மகனுக்கு) பிதா என்ன செய்தாரோ, அதையே எனக்கும் (இளைய குமாரனுக்கும்) செய்திடுவார்! தேவன் தன் பிள்ளைகளிடத்தில் பட்சபாதம் காட்டுவதே இல்லை. இயேசுவை அன்புகூர்ந்தது போலவே என்னையும் அன்புகூருவார்! இயேசுவை பாதுகாத்தது போலவே நம்மையும் பாதுகாப்பார்! கோரமான சிலுவையின்

*பாடுகள் அவருக்கு இருந்தாலும், அவரின் ஒரு எலும்புகூட முறிக்கப்பட பிதா அனுமதிக்கவேயில்லை! கால் எலும்பை முறிக்க சேவகன் வருவதற்கு முன்பாகவே, பிதா தன் குமாரனுடைய ஆவியை ஏற்றுக்கொண்டார்! இயேசுவின் ஊழிய ஆரம்பத்தில், பகைஞர்கள் அவரைச் சூழ்ந்து குன்றின் பாதாளத்தில் தள்ளி கொலை செய்ய முயன்றபோது, அங்கிருந்து அவரை நடத்தி, கூட்டத்தின் நடுவில் மறைந்து போகும்படி செய்தார்! சிலுவையில் அறைந்து கொன்றதை, 'தற்காலிகமான செயலாய்' மாற்றி மூன்றாம் நாளில் தன் குமாரனை உயிரோடு எழுப்பினார்!*

**இப்போது, முதற்பேரான இயேசுவை எப்படி பிதா அன்புகூர்ந்து, நடத்தி, பாதுகாத்தாரோ, அதைப் போலவே அவருடைய இளைய குமாரர்களாகிய நம்மையும் அன்புகூர்ந்து, நடத்தி..... நித்தியம் மட்டும் பாதுகாத்திடுவார்!**

*அவருடைய குமாரனின் சாயலுக்கு ஒப்பாய் மாறுவதற்கு தங்களை ஒப்புக்கொடுத்தும், இந்த சத்தியத்தை விசுவாசிக்காதவர்கள், தேவனையே விசுவாசிக்காதவர்கள்! பிதாவாகிய தேவனை நிந்தனை செய்பவர்கள்! தேவனுடைய வார்த்தையை மறுதலிப்பவர்கள்!!*

*மாம்சத்தில் வெளிப்பட்ட குமாரனாகிய கிறிஸ்துவை உங்கள் கண்கள் கண்டுவிட்டால், உங்களை 100% முழுமையாய் தேவனுக்கு அர்ப்பணித்திட தயக்கம் ஏதுமிராது! 99.9% அல்ல, 100%! அவ்வாறு தேவனுக்கு தங்களை முழுமையாய் அர்ப்பணிக்காதவர்கள் "பரத்தின் அக்கினியை அனுப்பிடும்" என்ற பாடலை பாடிக் கொண்டே இருந்தாலும் பரத்தின் அக்கினி அவர்கள் மீது வரப்போவதில்லை! இந்தபாடல் உங்களுக்குத் தெரிந்தபடியால் பாடினீர்கள்.... ஆனால், இந்த பாடல் தெரியாமல் இருந்தும்,* **தங்களை 100% தேவனுக்கு அர்ப்பணித்தவர் மீது, தேவன் தமது அக்கினியை சம்பூரணமாய் ஊற்றுவார்!**

*தேவனுக்கு தங்களை அர்ப்பணித்திருக்கிறோம் எனக் கூறியும், இன்று அநேகர் "சிறுகவே கொடுத்திருக்கிறார்கள்". ஆனால், முழுமையும் அர்ப்பணித்தவர்களோ "பெருக கொடுத்திருக்கிறார்கள்". இங்குதான், தேவனுடைய மாறாத பிரமாணம் கிரியை செய்து, சிறுக விதைக்கிறவன் சிறுக அறுக்கவும், பெருக விதைக்கிறவன் பெருக அறுக்கவும் வகை செய்கிறது! மனப்பூர்வமாய் பெருக விதைத்த வர்களுக்கு, பெருகிய அறுவடையான 1)நீங்கள் எல்லாவற்றிலும் சம்பூரணம் அடைகிறவர்களாய் 2)எப்போதும் சம்பூரணம் அடைகிறவர்களாய் 3)சகலவித நற்கிரியை உடையவர்களாய் 4)அதன் நற்கிரியை பெருகுகிறவர்களாய் 5)சகலவித கிருபையும்*

பெருகியவர்களாய், தேவன் உங்களுக்கு சம்பூரண ஆசீர்வாதத்தின் அறுவடையை வழங்குவார்! என 2கொரிந்தியர்.9:8-ம் வசனம் மாறாத வாக்குத்தத்தமாய் உரைக்கிறது! ஆமென்.

– சகரியா பூணன்

---

## இயேசுவின் ஐக்கியத்தை 'சிலுவையின் வழியே' தந்திட முடியும்!

**சி**ல வருடங்களுக்கு முன்பு என்னைத் தாக்கிய அம்மை நோயின் பக்க விளைவாய் என்னுடைய ஒரு கண்ணில் அதிக நோவு ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட அந்த கண்ணின் பார்வை 'முற்றிலும் இழந்து போகும்' அபாயம் இருப்பதாக மருத்துவர்கள் கூறினார்கள். என்னுடைய மூக்கிற்கும் கண்ணிற்கும் இடையில் தோன்றிய சிலந்தி கட்டி சுகமானாலும், திரும்பத் திரும்ப வந்து என்னை அதிக வேதனைக்குட் படுத்தியது. ஆகவே, மருத்துவர்கள் அந்த கட்டியை, அறுவை சிகிச்சையின் மூலமாய் அப்புறப்படுத்தி விட்டார்கள். இதன் விளைவாய் என் தலை முழுவதும் வீக்கம் கண்டு, தலையணை கூட என்னால் வைக்க முடியாது போனது! ஒரு சிறு சத்தம் கூட, என் தலை வலிக்கு அதிக வேதனையைத் தந்தது. இந்த நிலையில், நான் வசித்த மாளிகையில் பெரும் வாக்குவாதமும் சத்தமும் எப்போதும் இருக்கும்! அதையும் என் தலை வேதனையுடன் நான் சகிக்க வேண்டியதாயிருந்தது.

இவ்வித வேதனையான சூழ்நிலை ஏற்பட்ட போதும், அந்த நாட்கள் எனக்கு விலையேறப்பெற்ற நாட்களாய் மாறியது. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, யாதொரு பணியும் இல்லாமல் படுக்கையில் தனித்து விடப்பட்ட அந்த நாட்கள் 'தடை ஏதும் இல்லாமல்' **தேவனோடு இனிமையான ஐக்கியம்** கொள்ளும் சிலாக்கியம் பெற்றேன். இரண்டாவதாக, பாடுகளின் வழியாய் கிறிஸ்துவை தரிசிக்கும் பாதையை விரும்பிய எனக்கு, "இந்த சரீர வேதனை" தேவனிடமிருந்து எனக்கு வந்த பதிலாகக் கண்டேன். இங்கு, துறவற வேதனையை நான் குறிப்பிடுவதாக நீங்கள் எண்ணிவிடக்கூடாது:

ஒருவேளை, என் முழு சரீரத்தையும் துறவறத்தில் ஒடுக்கி முயற்சித்தாலும்..... நான் தேவனோடு துன்பத்தின் மூலம் உறவு கொண்டாட விரும்பிய அந்த விருப்பத்தை, அது ஒருக்காலும் பூர்த்தி செய்திருக்க முடியாது! அப்படியிருந்தாலும், என் உள்ளத்தில் நான் தேவன்பால் கொண்டிருந்த தீராத வேட்கையை தீர்ப்பதற்கு 'ஒரு துளியாக மாத்திரமே' அது இருந்திருக்கக் கூடும்! உண்மையில், நானும் கூட என் சரீர ஒடுக்கத்தின் மூலம் தேவனை தேடிப்பார்க்க

*‘கடுமையாய்’ முயற்சித்திருக்கிறேன். ஆனால், அவை யாதொன்றும் தேவனோடு நான் கிட்டிச்சேர நடத்தாதபடியால், யாதொன்றும் “சிலுவையின் மீது நான் கொண்ட தாகத்திற்கு” இணையானதாய் இல்லை!*

**ஓ, சிலுவையில் அறையுண்ட இரட்சகரே! என் சுயம் மடிந்து ஒழிவதற்கு, நீர் மாத்திரமே எனக்குப் போதும். சிலுவையே அல்லாமல் என் சுயத்தை அழிப்பதற்கு வேறொரு வல்லமை இந்த பூமியில் நான் காணவில்லை! என என்னை சமர்ப்பித்தேன்!**

*தங்களை கிறிஸ்தவர்கள் என அழைத்துக் கொண்டு, கிறிஸ்து அல்லாத வாழ்க்கை வாழ்பவர்களே எங்கும் இருக்கிறார்கள். அவர்கள் வேண்டுமானால், தங்கள் சொகுசான வாழ்க்கையை வைத்தும், தங்களின் மனம் மகிழும் மண்ணின் இன்பங்களை வைத்தும்..... அற்பமான ‘தற்காலிக தேவலோகம்’ போன்ற சல்லாபங்களை வைத்தும் மேன்மை பாராட்டிக் கொள்ளட்டும்! ஆனால் என் இருதயத்தின் முழு விருப்பமும் திசைமாறி, திட மனதுடன் நின்ற பாதை “மௌனமாய் கிறிஸ்துவின் பாடுகளில் பிரவேசிக்கும்” பாதையே ஆகும்! அவருடைய பாடுகளில் என்னை முற்றிலும் இணைத்துக் கொண்டு, எனக்குரிய எல்லாம் அழிந்து போக என்னை ஒப்புக்கொடுத்து விட்டேன். ஆம், வெறும் மனிதனாய் வாழ்வதையும் நான் வெறுத்தேன்! என் சொந்த உணர்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்! என் பசி, என் விருப்பம் ஒழிந்திட என்னை சமர்ப்பித்தேன்!*

**இவை யாவற்றையும், மரணத்திற்கு கொண்டு வரும் கிறிஸ்துவின் பாடுகளோடு நான் இணைந்து ஐக்கியமானேன்.... அதன் விளைவாய், உயிர்த்தெழுந்த அவரது உன்னத பெலனும்! முழுமையான அவரது ஜீவியமும்! எனக்குச் சொந்தமாய் வந்து சேர ஒப்படைத்தேன்.**

*இந்நிலையில், என் கண்ணில் வந்த துயரமான அந்த கட்டியை சுகப்படுத்துவதற்கு மீண்டுமாய்* **பாரீஸ்** *பட்டணத்திற்கு சென்றிட ஆயத்தமானேன். அங்கு தான் கிரங்கர் அம்மையார் எனக்கு சிபாரிசு செய்த பெர்டாட் (*Bertot*) என்ற தேவபக்தன் இருந்தார். அவரும், என்னைப் போன்ற நெருக்கமான வாழ்வின் பாடுகளுக்குள் சென்றவர் எனவும், அவரை காண்பது என் ஆவிக்கு மிகுந்த உற்சாகமளிக்கும் எனவும் கூறி இருந்தார்கள். பாரீஸிற்கு நான் புறப்பட்டுப் போவதற்கு முன்பாக, என் தந்தையின் வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்தேன். இதுவரை இல்லாத மனஉருக்கமும் கண்ணீரும் நிறைந்தவராய் என்னை அன்புடன் அணைத்து எனக்கு விடை தந்தார். இதுவே அவர் எனக்குத் தந்த ‘கடைசியான விடை’ என்பதை அவரும் அறியவில்லை!*

நானும் அறியவில்லை! உலகவர்த்தகம் நிறைந்த பாரீஸ் பட்டணத்தில், தெருக்கள் முழுவதும் ஜனக்கூட்டத்தால் நிறைந்திருந்தது. ஓட்டமும் சாட்டமுமாய் ஜனத்திரளின் நெருக்கமும் அவர்களின் சத்தமும் 'என் அந்தரங்கத்திற்குள் நான் பெற்றிருந்த ஜெப சிந்தையை' சற்று குளிர வைத்தது போல் இருந்தது. இந்த **உலக மகிமையின் ஆதிக்கம்** எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதை நான் கண்டேன்! ஆகிலும், நான் விழிப்புள்ளவளாய் என்னை கர்த்தரோடு கொண்ட ஐக்கியத்தில் திடப்படுத்திக்கொண்டேன்!

பின்பு நான் பெர்டாட் என்ற பரிசுத்தவானை சந்தித்தேன். என்னைப் போன்ற பாடுகளைச் சந்தித்த அந்த பரிசுத்தவானிடம், என் துயரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு என் நாவு துணியவில்லை. என் துன்ப அனுபவங்களை அவரிடம் கொட்டித் தீர்க்கலாம் என்ற எனது மனுஷீக எண்ணத்தை தேவன் முற்றிலும் தடை செய்துவிட்டார். இதை விட ஆச்சரியமாய், நான் சொல்ல வந்த துயர சம்பவங்கள் என் மனதிலிருந்து மறக்கப்பட்டு போனதையும் கண்டேன்! மிகத் தெளிவாய் நான் அவரிடம் பேச முடிந்ததெல்லாம் "இன்னமும் எனக்குள்ளிருந்து போராடும் பொல்லாத சுயத்தையே" அவரிடம் பகிர்ந்து கொள்ள தேவன் அனுமதித்தார். அன்று அவரை சந்தித்த பின்பு, அவரது மரணம் வரை நான் மீண்டும் அவரை சந்திக்கவில்லை. இதுபோன்ற சம்பவத்தின் மூலமாய், **என்னை மறைத்துக் கொண்டு முழுவதும் தேவனுக்கே என் ஜீவியம் மலர்ந்திருக்க** கர்த்தர் அநுக்கிரகம் செய்தார். இதுவும், நான் முற்றிலுமாய் சுயத்திற்கு மரித்திட எனக்கு அதிகமாய் உதவியது! மறைந்திருக்கும் துன்பமே, அவரின் 'அந்தரங்க' ஐக்கியத்தை மேன்மைப்படுத்தும்! என்பதை கற்றுக்கொண்டேன்!

– மேடம் குயான்

---

### தன் சுகவீனத்தில் மனந்தளராது, பிறரை சுகப்படுத்திய ஊழியர்!

**த**ன்னிடம் வந்த ஏராளமான வியாதியஸ்தர்கள், ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லோரும் சுகமடைந்த அற்புதமே ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்தின் ஆச்சரியமான ஊழியமாய் இருந்தது. ஆனால் இத்தனை அற்புதமான சுகமாக்கும் ஊழியத்தைப் பெற்றிருந்த அவரோ, ஒரு நோயாளியாய் இருந்தார்! அந்த நாட்களில், சுகமளிக்கும் வரத்தைப் பெற்ற வல்லமையான ஊழியர் ஒருவர், ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் வீட்டிற்கு வந்தார். அப்போது, விக்கிள்ஸ்வொர்த்தின் மனைவி அந்த ஊழியரிடம் "பிறருக்காக ஜெபித்து சுகம் பெறச் செய்த ஊழியர், தன்னுடைய சுகவீனத்திற்காக

மருந்துகள் சாப்பிட நேர்ந்தால், அதை என்னவென்று சொல்வீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு அந்த ஊழியர் "அப்படியானால் அந்த சுகமளிக்கும் ஊழியரிடம் கர்த்தர் மீது முழு விசுவாசம் இல்லை! என்றே கூறுவேன்" என பதில் அளித்தார்.

அவருடைய பதிலால் மனம் துவண்ட விக்கிள்ஸ்வொர்த், ஓய்வு நேரத்தில் அந்த சுகமளிக்கும் ஊழியரைப் பார்த்து **"பிறருக்கு சுகமளிக்கும் ஊழியத்தை செய்துவிட்டு, சுகவீனமாய் இருந்த அந்த ஊழியன் நான்தான்!" எனக் கூறினார்.** மேலும் அவரைப் பார்த்து "என் சிறு வயது முதல் இன்று வரை எனக்கு மூல வியாதி உண்டு. அதற்காக, நான் தொடர்ந்து 'உப்பை' மருந்தாக எடுத்து வருகிறேன். அந்த மருந்தை நான் எடுக்கவில்லை என்றால் எனக்கு அதிகமான இரத்தப்போக்கு உண்டாகிவிடும். இன்று முதல் அந்த உப்பு மருந்தை நான் விட்டுவிட தீர்மானிக்கிறேன். என் விசுவாசத்தோடு நீங்களும் துணை நின்று ஜெபியுங்கள்" என வேண்டினார். அந்த ஊழியர், உடனடியாக எனக்கு பூரண சுகம் கிடைக்கும்படி விசுவாசத்துடன் ஜெபித்தார்! அடுத்த நாளிலிருந்து உப்பு மருந்தை எடுக்க விக்கிள்ஸ்வொர்த் நிறுத்தி விட்டார். "தேவன் என்னை சுகப்படுத்தி விட்டார்" எனவும் தன் மனைவியிடம் அறிக்கைச் செய்தார்!

மற்றொருமுறை "குடல் வால்வு" வலி ஏற்பட்டு சுமார் ஆறு மாதங்கள் விக்கிள்ஸ்வொர்த் கஷ்டப்பட்டார். அதன் உச்சக்கட்டமாக, ஒரு நாள் வலி அதிகரித்தபோது "ஒருவேளை ஆண்டவர் என்னை அழைத்தால் நான் அவரிடம் போகத் தயார்" என தன் மனைவியிடம் கூறினார். அப்போது சுகம் பெற இருந்த ஒரே வழி அறுவை சிகிச்சைதான்! மருத்துவரை வரவழைக்க விக்கிள்ஸ்வொர்த், தன் மனைவிக்கு அனுமதி தந்தார். விக்கிள்ஸ்வொர்த்தை பரிசோதித்த மருத்துவர், அறுவை சிகிச்சையை உடனே துவங்க வேண்டும்.... ஒரு சிலமணி நேரத்தில் ஆயத்தமாகுங்கள் என கூறிச் சென்றார். அச்சமயம் ஒரு வயது சென்ற மூதாட்டி விக்கிள்ஸ்வொர்த்தை பார்க்க வந்தபோது, அவர் பட்ட கஷ்டத்தை கண்டார்கள். சற்றும் தாமதிக்காமல் "இயேசுவின் நாமத்தில்" அதிகாரமாய் ஜெபித்த உடன், வலி நின்று விட்டது! நான் வேகமாக படியிலிருந்து இறங்கி வருவதை என் மனைவி ஆச்சரியமாய் கண்டாள். "நான் சுகமாகி விட்டேன்!" என கூற, அதை ஆமோதித்த என் மனைவி "இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு விக்கிள்ஸ்வொர்த் ஒரு விலாசத்தைக் கூறி, அங்கே தனக்கு ஊழியம் இருப்பதாக விரைந்து வெளியேறினார்!!

அவர் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றவுடன், மருத்துவர்

வீட்டிற்கு வந்து சேர்ந்தார்! அந்த மருத்துவரிடம் "டாக்டர், என் கணவர் ஊழியத்திற்கு வெளியே சென்றுவிட்டார்" எனக் கூறியதும், ஆச்சரியமடைந்த மருத்துவர் "நான் ஆணையிட்டு சொல்லுகிறேன், மருத்துவ நிலைப்படி, அவருடைய சடலத்தை வீட்டிற்கு கொண்டு வருவதை காண்பீர்கள்!" என வருத்தமுடன் கூறிச் சென்று விட்டார்!

வீடு திரும்பிய விக்கிள்ஸ்வொர்த், மருத்துவர் கூறிச் சென்ற நிகழ்ச்சியை தன் மனைவியின் மூலம் கேட்டறிந்தார். ஸ்மித் விக்கிள்ஸ் வொர்த்தும் **அவருடைய மனைவி பாலியும்** உடனே மேஜையின் முன்பு அமர்ந்தார்கள். இருவரும் கரங்களைக் கோர்த்து தீர்மானம் எடுத்தார்கள். பின்பு விக்கிள்ஸ்வொர்த் "ஓ கர்த்தாவே, இந்த மருத்துவரின் அறிக்கை எதிர்மறையாக இருந்தாலும், இன்று முதல் எங்கள் விசுவாச தீர்மானத்தை உறுதிபட உமக்கு முன்பாக அறிக்கை செய்கிறோம்:

> **ஆம் கர்த்தாவே, இன்று முதல் ஒரு மருந்தும் என் வீட்டில் வைத்திருக்க மாட்டோம். ஒரு மருத்துவரையும் வீட்டிற்கு அழைக்க மாட்டோம். யாதொரு மருந்தும் என் வீட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிக்க மாட்டோம்!" என உறுதிபட ஜெபித்தார்கள்.**

பல்லாண்டு காலமாய் ஊழியம் செய்த ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் தேவனுக்கு முன்பாக செய்த தீர்மானத்தின்படியே 'சுகித்து' வல்லமையாய் ஊழியம் செய்தார்கள்!

ஆகிலும், இதுபோன்ற தீர்மானம் தன்னுடைய சொந்த விசுவாசத்தின் அடிப்படையாயிருந்தது என்றே பிற்காலங்களில் கூறினார். அது தேவனுக்கு தனக்கும் உரியது அல்லாமல், வேறு ஒருவருக்கும் தனது தீர்மானத்தை நிர்ப்பந்திக்க அவர் முயன்றதில்லை! அல்லது தங்கள் சுகவீனத்திற்காக 'மருத்துவரை நாடி' மருந்துகள் எடுத்துக் கொண்டவர்களை அவர் ஒருபோதும் அற்பமாய் எண்ணியது மில்லை! ஆம், அப்படி ஒரு **தாழ்மையான ஊழியனாய்,** கர்த்தருக்கு வலிமையாய் ஊழியம் செய்து, தன் பங்கை நிறைவேற்றினார்!

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

---

## தீர்மானித்த பயணமே, இலக்கை அடைந்திடும்!

**தீ**ர்மானம் ஏதும் இல்லாமல், பயணமும் ஏதுமில்லை! உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் தீர்மானமே, சமுத்திரமாகிய இந்த உலகில், உங்கள் படகு சரியான திசை நோக்கிச் செல்ல வழிவகுக்கும்!

அன்றொருநாள், தானியேல் தான் இருந்த ராஜஅரண்மனையில் ஓர் தீர்மானம் எடுத்தான்! அந்த தீர்மானம் "ராஜாவின்

*போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது என்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்த மறுத்து, பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்" (தானியேல்.1:8). இது, ஒரு ராஜாவுக்கு முன்பாக தானியேல் எடுத்துக்கொண்ட ஒரு மிகப்பெரிய தீர்மானம் ஆகும்! இதுபோன்ற அசைக்க முடியாத உறுதியுள்ள தீர்மானத்தை "முதுகெலும்பில்லாத, தைரியமற்ற இன்றைய கிறிஸ்தவத்தில்" நாம் அதிகமாய் கேட்க முடியவில்லை! இருப்பினும், கர்த்தரை சேவித்து வாழும் வாழ்க்கையில், எண்ணற்ற தீர்மானங்கள் எடுத்து வாழ்ந்த பக்தர்களின் குறிப்புகளை வேதாகமம் நமக்கு வழங்கியிருக்கிறது.*

*அன்றொருநாள், யாக்கோபு தேவனுக்கு முன்பாக "ஓர் உறுதியான பொருத்தனை அல்லது தீர்மானம் செய்தான்" என வாசிக்கிறோம். அந்த தீர்மானமே, யாக்கோபு தேவனோடு உறவாடி வாழ்ந்த ஓர் ஆச்சரியமான வாழ்க்கைக்கு நல்ல ஆரம்பமாய் அமைந்தது! இளைஞன், தானியேல் தன் இருதயத்தில் தீர்மானித்தான், தேவனும் அவனுடைய தீர்மானத்தை கனம் பண்ணி, ஆச்சரியமான விடுதலையை அவனுக்குத் தந்தார்!*

> **இயேசுவும் முழு தீர்மானத்துடன், பிதா தனக்கு அளித்த பாத்திரமாகிய சிலுவையை தழுவிக் கொள்ள தீவிரித்து முன் சென்றார்! அந்த தீர்மானத்தின்படியே, சிலுவையில் மரித்து மூன்றாம் நாளில் இயேசுவை உயிர்த்தெழச் செய்து, பிதா அவரை கனம் பண்ணினார்!**

*அன்றொருநாள் "சிலுவையில் அறையப்பட்ட இயேசுவையே அல்லாமல், வேறு எதையும் நீங்கள் அறியாதிருக்க நான் தீர்மானம் செய்தேன்" என பவுல் உறுதி பூண்டார். அதுவே அவரது வாழ்வும் முடிவுமாயிருந்தது! இவ்வாறு வேதாகமத்தில், தங்கள் உறுதியான தீர்மானத்தால், "ஆவிக்குரிய உன்னதத்தை" அடைந்த புருஷர்களையும் ஸ்திரீகளையும் குறித்து வாசிக்கிறோம்!* **ஆனால் தீர்மானம் ஏதும் இல்லாது பயணம் செய்பவர்கள் திசை மாறி,** *பாவம் செய்பவர்களாயும், தங்கள் சுயசித்தத்தின் படுகுழிக்குள் விழுபவர்களாயும் இருக்கிறார்கள்! இவர்கள் சென்றடைந்த இலக்கு "பேரிழப்பாகவே" இருக்கிறது! கிறிஸ்துவின் உத்தம அடியார்களோ, தேவன் தங்களுக்கென்று வைத்த இலக்கை அடைவதற்கு உறுதியான தீர்மானத்தோடு, தீராத வேட்கை கொண்டு முன்னேறுகிறார்கள்!*

> ***ஆம், இவர்கள் கண்டடைந்த இலக்கு, தேவனுடைய சித்தத்தை செய்திட வேண்டுமென்ற அவர்களது உறுதியான தீர்மானத்தை சார்ந்ததாகவே இருக்கிறது!***

இன்று, நல்லதோர் ஆரம்பமாய் தேவசித்தமே செய்து முடித்திட, நம் வாழ்வின் கப்பல் பயணத்தை **திடமான தீர்மானத்துடன்** திசை திருப்புவோமாக! இவ்வாறு நீங்கள் செய்துவிட்டால், சரியான திசையில் உங்கள் வாழ்க்கை கப்பல் சென்று கொண்டிருக்கும்! உங்கள் கப்பலில் எத்தனை புயல் வீசும்.... எத்தனை கடல்கொந்தளிக்கும்.... என்பதெல்லாம் உங்களுக்கு ஒரு பொருட்டாகவே இருக்காது. அந்த கெம்பீர பயணத்திற்கு **உறுதியான தீர்மானம்** என்ற உங்கள் பாய்மரத்தை விரித்திடுங்கள். தேவனுக்குள் முன்னேறிச் செல்லுங்கள்!!

– *A.W.* டோசர்

---

## சுய புத்தியால் 'தேவன் உண்டென்று' அறிந்திட இயலாது!

**ஒ**ருமுறை, ஒரு வாலிபன் என்னைச் சந்தித்து "தேவன் இருக்கிறார் என்பதை எனக்கு நிரூபித்திட ஒருவரும் இல்லாதபட்சத்தில், நான் எப்படி அவருடைய சத்திய வழியில் நடந்திட முடியும்!" எனக் கேட்டான்.

நான் அவனை அன்புடன் உற்று நோக்கி "தான் இருப்பதை நிரூபித்திட தேவனுக்கு எந்த அவசியமும் இல்லை" எனக் கூறினேன். நம்முடைய தர்க்க சாஸ்திரங்களும், நம்முடைய மனதின் அளவும் வெகு குறைவானது! நம்முடைய சிந்தனைக்கு அப்பாற்பட்ட இறைவனின் பிரசன்னத்தை, நமக்கு நிரூபித்து காண்பிக்க தேவனால் முடியும்! ஆனால் தேவனோ, நம் சிறிய மனதளவில் அவரை நிரூபித்து விளங்கிக் கொள்வதைவிட, அவரது வானளாவிய, புத்திகெட்டாத ஜீவன் நிறைந்த **அவரது சமூகத்தை நாம் அனுபவித்து களிகூரவே** அவர் விரும்புகிறார்!

இந்த மானிட சரீரத்திற்குள்தான் நம்முடைய ஆவி பிழைத்து வளர்ந்திட முடியும்! அது, ஒரு கோழிகுஞ்சு ஒரு முட்டைக்குள் வளர்வதற்கு ஒப்பானதாகும்.

ஒருவேளை, உள்ளே வளரும் கோழிகுஞ்சுக்கு வெளியே இருக்கும் பரந்த உலகத்தின் மகிமையையும்.... கூட்டைவிட்டு வெளிவந்ததும், ஒரு அன்புள்ள தாய்கோழி காத்துக் கொண்டிருப்பதையும், நம்மால் கூற முடிந்தால், என்ன சம்பவிக்கும்? அந்த சிறிய முட்டைக்குள் இருக்கும் கோழி குஞ்சு, அழகிய மலர்களும், வனப்பான மலைகளும், வண்ண வண்ண பூக்களும், இன்னும் விவரிக்க முடியாத வசீகர தோற்றங்களும் வெளியில் இருப்பதையோ அல்லது ஒரு மகத்துவமான 'காக்கும் தாய்' இருப்பதையோ, அந்த குஞ்சு நம்பாது! ஏனெனில் அந்த முட்டைக்குள்ளிருக்கும் சிந்தனைகளும் எண்ணங்களும் வெளி உலகத்தின் நிஜத்தைவிட பலகோடி மடங்கு குறுகியது!

இதைவிட நீங்கள் இன்னும் அதிகமாய், அந்த கோழி குஞ்சைப்

*பார்த்து "பேதமையான கோழி குஞ்சே, உன்னிடம் வளரும் இறகுகளும் செட்டைகளும், உனது ஒளிரும் கண்களும், நீ இந்த கூட்டைவிட்டு வெளியே வரும்போது, அந்த இறகுகள் உன்னை பறந்திடச் செய்யும்! கண்டு மகிழ்ந்திடச் செய்யும்!" என நீங்கள் விவரித்திட கூடும் என்றாலும், அந்த கோழி குஞ்சு இன்னமும் அதை நம்பிட இயலாது!*

**என்னதான் நிரூபணத்தை விளக்கிக் கூறினாலும்..... அந்த குஞ்சு, கூட்டை உடைத்து வெளியே வந்தாலொழிய ஒரு ஆச்சரியமான பரந்த வெளி உலகத்தை நம்பவே நம்பாது!**

*இதுபோலவே, ஒரு மனிதன் தன் சரீர உணர்வுகளுக்குள் முடங்கிக் கிடக்கும்போது, அவனால் ஒரு ஆவிக்குரிய ஜீவிய உலகத்தையும், தேவன் வாசமாயிருக்கும் அவரது சமூகத்தையும் உணரவே முடியாது! 'பறந்து செல்லும்' தனது இறக்கையின் உண்மையை, அந்த கூட்டின் பெலவீனத்திற்குள் முடங்கிக் கிடக்கும் அந்த குஞ்சுகள் அறிவது இல்லை! கூட்டிற்குள் பெலஹீனமான கண்களை உடைய அந்த கோழி குஞ்சுவினால் "நித்திய தேவன் தன் சொந்த பிள்ளைகளுக்கு ஆயத்தம் செய்திருக்கும் 'மகிமையான பரலோக பொக்கிஷங்களை' அந்த கூட்டிற்குள் சிக்கிய கண்களால் காணவும் இயலாது!" நம் குறைவான மானிட சிந்தையிலிருந்து வெளியே வருவதற்கு ஒரே நிபந்தனை என்னவென்றால், "எனக்கு ஜீவன் தந்த தேவ ஆவியை" இந்த பேதையான 'கோழி குஞ்சு' விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு உணர்வதுதான்! இதுவே, தன் தாய் கோழியிடமிருந்து அடைகாத்து பெற்றிடும் உஷ்ணத்திற்கு ஒப்பானதாகும். இந்த வெப்பம்கூட நம்மிடம் இல்லையென்றால் 'அந்த கோழி குஞ்சு கூட்டிலிருந்து வெளியே வரமுடியாதது போலவே' நாமும் நம் சொந்த புத்தியின் குறுகிய சிறையிலிருந்து வெளிவர முடியாமல்.... அந்த கூட்டிற்குள்ளாகவே மடிந்து,* **தேவனாகிய தாய் கோழியை** *காண முடியாத பரிதாபத்தில் அழிந்து போய்விடுவோம்!*

**ஆம், தேவனை விசுவாசிப்பது ஒரு பாக்கியம்!** *அவர்கள் மாத்திரமே ஆவிக்குரிய உணர்வு கொண்ட வாழ்க்கைக்குள் பிரவேசித்து தேவனுடைய பிரசன்னத்தை தங்கள் முழு இருதயமாய் அன்புகூர்ந்து அனுபவிப்பார்கள்! மற்றவர்கள் அந்த குறுகிய கூட்டின் 'உலக சிந்தைக்குள்' மடிவார்கள்! என் பதிலைக் கேட்ட அந்த வாலிபன், கண்ணீருடன் "நான் தேவனை விசுவாசிக்கிறேன்! என் தேவனாகிய சிருஷ்டிகரை,* **என் தாய் கோழியை** *விசுவாசிக்கிறேன்!" என மன நிறைவுடன் கூறினான். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!*

*– சாது சுந்தர்சிங்*

## ‘ஜீவிய மாறுதலற்ற’ ஊழியரிடம் சபை ஒப்புவிக்கப்படலாகுமா?

*“**நா**ன் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு....” என, இவ்வளவு பெரிய நிச்சயத்தை அப்போஸ்தலனாகிய பவுல் தன் ஊழியத்தில் எப்படி பெற்றார்? (பிலி.**2:14**). தாம் செய்த ஊழியம் வீணாய் போகாதென்றும், அழியாது நிலைத்திருக்கும் என்றும் நிச்சயமுள்ளவராயிருந்தாரே! இந்த நிச்சயமே அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. நமது ஊழியத்தைக் குறித்தும் இவ்வளவு நிச்சயமும் மகிழ்ச்சியும் நமக்கு வேண்டுமல்லவா? நான் நாற்பது வருடத்திற்கு மேலாய் ஊழியம் செய்திருக்கிறேன், ஐம்பது வருஷம் உழைத்திருக்கிறேன் என்று இச்சகம் பேசும் ஊழியர்கள் உண்டு!*

**ஊழியத்தின் வருஷமோ அதன் பெருக்கமோ அல்ல! ஊழியத்தின் தன்மையே பிரதானம்! ஆண்டவருடைய சுமார் மூன்று வருஷ ஊழியம், இன்றும் உலகத்தை இரட்சிக்கும் தேவ பலமாயிருக்கிறது!**

**கர்த்தருடைய சமுகத்தில்** *நமது ஊழிய வேலைகளைப் பரிசோதனை செய்வோமானால், நாம் துக்கப்படாமலிருக்க முடியாது. ஒரு சமயம் பெருமாள்குளம் என்ற கிராமத்தில் கூட்டங்களை நடத்தும்படி ஒரு மாலை நேரத்தில், சற்று முன்னதாகவே போய்ச் சேர்ந்தேன். அவ்வேளையில், ஆலயத்தில் சபை போதகர் ஆராதனை நடத்திக் கொண்டிருந்தார். ஆராதனைக்கு இடையூறு செய்யாதபடி வெளியே ஜன்னல் ஓரமாய் நின்றேன். ஆராதனை நடத்திய போதகர் வேதத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர். அவர் வாசிப்பையும், ஜெபத்தையும், பிரசங்கத்தையும் ஜன்னல் வழியாய் பக்தியுடன் கவனித்தேன். என் மனதுக்கோ, அவர் நடத்திய ஆராதனை வேதனையாயிருந்தது! ஆராதனை முடிந்ததும் சபையார் வெளியேறுகையில் நான் ஆலயத்திற்குள் சென்று போதகரைக் கண்டேன். “ஐயா, எப்போது வந்தீர்கள்” என்று ஆச்சரியத்தோடு கேட்டார்! “நான் முன்னதாகவே வந்து விட்டேன், வெளியே ஜன்னல் பக்கமாய் நின்றேன்” என்றேன். “அப்படியானால் என் பிரசங்கத்தைக் கவனித்தீர்களோ?” என்றார். பக்தியின் சாரம் ஏதுமில்லாமல், உலக மேன்மையை உயர்த்திப் பிரசங்கித்த அவரிடம்,*

**“நான் கவனித்து ஆவதென்ன? ஆலயத்திலிருந்த ஆண்டவர் உங்கள் பிரசங்கத்தையும் நீங்கள் ஆராதனை நடத்தின விதத்தையும் கவனித்துக் கொண்டிருந்தாரே!” என்றேன்.**

வெகுநேரம் அவர் என்னிடம் பேசவில்லை! நாம் எப்படிப் பட்டவர்களென்றும்? நமது ஊழியம் எத்தன்மையானதென்றும் கர்த்தர் அறியமாட்டாரா? வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற நிச்சயமும் மகிழ்ச்சியும் அந்தப் போதகரிடம் இல்லை. அப்படியிருக்க, உத்தம ஊழியர்களுக்கு தங்கள் ஊழியத்தில் அந்த நிச்சயமும் தைரியமும் இருக்க வேண்டியது எத்தனை அவசியம்!

அப்போஸ்தலனாகிய பவுல், பலன் தரும் ஊழியம் செய்ததற்கு முக்கிய ஆதாரமாயிருப்பதெல்லாம், போதிப்பவன் "தன் ஜீவியத்தில் மறுரூபம் பெற்றவனாய்" இருத்தல் வேண்டும் என்பதுதான். ஆம், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் போதகர் யாராயிருந்தாலும், முதலில் அவர்களே இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும்! **இரட்சிப்பு ஆண்டவர் நமக்குள் நடப்பிக்கும் ஒரு அற்புத மாறுதல்.** அது சன்மார்க்கமல்ல, சீர்திருத்தமல்ல, ஒரு புதிய சிருஷ்டிப்பு! என்று பவுல் கூறினார். பழைய வைகள் ஒழிந்து, சகலமும் புதிதான ஒரு பெரிய மாறுதலை பவுல் தமது அனுபவத்தில் கண்டார். இரட்சிப்பின் சுவிசேஷத்தை நான் சபைகளில் பிரசங்கித்துக்கொண்டிருந்த காலத்தில், பண்ணை விளை ஊரில், வயது சென்ற ஆவிக்குரிய சிநேகிதர் ஒருவர் என்னைப் பார்த்து:

> **"நம்ம ஊர் பொதிகை மலை 'திரும்பிவிட்டது' என்று யாராகிலும் சொன்னால் உடனே நம்பிக்கொள்ளுங்கள்! ஆனால், 'இன்னான்' மனந்திரும்பிவிட்டான் என்று சொன்னால் நீங்கள் எளிதில் நம்பிவிட வேண்டாம்!" என்று சொன்னார்.**

அவர் எதிர்மறையாய் பேசுவதுபோல் அச்சமயம் எனக்குத் தோன்றிற்று! ஆனால் காலம் செல்லச் செல்ல அவரின் ஆழமான கருத்தை நான் கண்டறிந்தேன்! இரட்சிப்பு லேசானதல்ல, ஆண்டவர் நமக்குள் நடப்பிக்கும் ஓர் அற்புதம் என்பதையே அவர் வலியுறுத்தினார்! கிறிஸ்து யாரைத் தொட்டாரோ, அல்லது யார் அவரைத் தொட்டார்களோ அவர்களில் 'ஆச்சரியமான' மாறுதலுண்டானதை சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். கிறிஸ்துவில் நிலைத்திராமலும், அவராலே நாளுக்கு நாள் இரட்சிப்பின் மாறுதலடையாமலும் இருக்கிறவர்கள் உண்மையான ஊழியர்களாய் இருந்திட இயலாது! அவர்கள் வேதத்தைப் படித்த அறிவினால் காலமெல்லாம் பிரசங்கிக்கலாம். அவர்கள் பிரசங்கத்தில், வார்த்தைகளும் சத்தமும் இருக்குமேயல்லாமல், ஆவியானவரின் வல்லமை காணப்படாது! தங்கள் சொந்த அனுபவத்தில் இரட்சிப்பின் மாறுதல் இல்லாதவர்கள் 'ஆவியோடும் வல்லமையோடும் முழு நிச்சயத்தோடும்' ஒருக்காலும் பேசமுடியாது (1தெச.1:5). ஜீவியத்தில் முழு நிச்சயம் இல்லாத

அவர்களுடைய ஓட்டமும் ஊழிய பிரயாசமும் வீணாகும்!

**ஆவியின் வல்லமையினால் ஜீவிய மாறுதல் இல்லாதவர்களைப் போதகர்களாக அபிஷேகம் பண்ணி, சபையாரை இவர்கள் கையில் ஒப்புவிப்பதைப்போல், சாத்தான் பெறக்கூடிய நிகரற்ற வெற்றி வேறெதுவுமில்லை!**

இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைத் தன்னில் ஏராளம் அனுபவித்த பவுலின் உண்மையான ஊழியத்தை, கர்த்தர் ஆசீர்வதித்தார்! ஆகையால் 'நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்' என்று அப்போஸ்தலன் சொன்னது முற்றிலும் சரி!

– பரமானந்தம் ஐயர்

---

## இடையூற்றால் விசனமடையாத தெய்வ அன்பு!

**எ**ன் ஆசிரமத்தில், நான் மிக துரிதமாய் செய்து முடிக்க வேண்டிய பணி ஏராளம் இருந்தது! அந்த சமயத்தில் ஆசிரமத்து சகோதரிகளோ, அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை 'ஏனோதானோவென்று' செய்ததை கேள்வியுற்றேன். நான் வருத்தமுடன் சென்று, அதை சரி செய்து திரும்ப காலதாமதம் ஆகிவிட்டது. நான் செல்ல வேண்டிய ஊழியத்திற்கு **இப்படி ஒரு இடையூறு ஏற்பட்டுவிட்டதே** என சஞ்சலமுற்றேன்! அதனிமித்தம் அடுத்து அடுத்து என்னை சந்தித்தவர்களிடம் கோபமாய் பேசினேன்!

இவ்வாறு நான் சந்தித்த விசனமான நிகழ்ச்சி, என் ஆத்துமாவில் காரிருள் சூழ வைத்தது! அது என்னோடு நின்று விடாமல், என்னைச் சூழ இருந்த மற்றவர்களையும் பாதித்து, என்னுடைய அந்தகாரம் அவர்களுக்கும் பரவிச் சென்றது. இப்படி ஒரு விளைவைக் கண்ட நான் மிகவும் துக்கமடைந்தேன்.

**உடனடியாக தேவனுடைய சமுகத்தில் என்னைக் கொண்டு வந்து நிறுத்தி சோதித்துப் பார்த்தேன். அப்போதுதான், எனக்கு ஏற்பட்ட இடையூறுகள் ஆவியானவரால் அருளப்பட்டது என கண்டேன்! மெய்யான தெய்வ அன்பு எங்கு உள்ளதோ, அந்த அன்பை யாதொரு இடையூறும் சேதம் விளைவித்திட முடியாது! என்ற உண்மையும் எனக்குத் தெளிவானது!**

நான் கண்ட மற்றொரு உண்மை என்னவென்றால், என்னுடைய தெய்வீக அன்பை நான் சேதமடையாது பாதுகாத்திருந்தால், என்னைச் சூழ இருப்பவர்களுக்கும் தெய்வீக அன்பை ஒளிவீசியிருக்க முடியும்! அப்படி இல்லையென்றால், நான் பாதிக்கப்பட்டுப்போன **அன்பின் மந்தார ஜீவியம்** பிறரையும் தாக்கி, அவர்களையும் இந்த மந்தாரத்திற்குள்

*இழுத்து இருளடையச் செய்யும்! என்ற உண்மையையும் விளங்கிக்கொண்டேன். நான் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டு "ஓ கர்த்தாவே இனி எந்த இடையூறுகளும், என் தெய்வ அன்பிற்கு சேதம் உண்டாக்காதிருக்க எனக்கு உதவும்!" என ஜெபித்து எழுந்தேன். இப்போது, என் நெஞ்சத்தில் கல்வாரி அன்பு எவ்வளவு குறைவாக இருக்கிறது என என் நிலையை அறியச் செய்யும்படி சம்பவித்த 'இடையூறு ஏற்படுத்திய ஆசிரம ஸ்திரீகளுக்காய்' நான் தேவனை மனதார ஸ்தோத்தரித்தேன்!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## இயேசுவை தொழுதிட, நமக்கு ஓர் பலிபீடம் வேண்டும்!

*குஷ்டரோகத்திலிருந்து சுகம்பெற்ற "பரிசேயனாகிய சீமோன்" ஓர் ஸ்தோத்திரக்கூட்டம் நடத்தி இயேசுவிற்கு விருந்து கொடுத்த சமயத்தில், ஒரு ஸ்திரீ "விலையேறப்பெற்ற பரிமள தைலத்தை" இயேசுவின் சிரசில் ஊற்றினாள்(மத்.26:7). அதை இயேசுபெருமான் மெச்சிக் கொண்டு "சீமோனே, நான் உனக்கு ஒரு காரியம் சொல்ல வேண்டும்" (லூக்கா.7:40) என ஓர் செய்தியை முன் வைத்தார்! ஆம், "உன் ஸ்தோத்திரம் வேறு" "இவள் ஸ்தோத்திரம் வேறு" என்றே சொல்லி விட்டார்! "கர்த்தர் சுகம் கொடுத்தார், உபகாரம் செய்தார்... ஸ்தோத்திரம்!" என்பதில் 'நளதம்' இருந்தாலும், அது ஒன்றும் தேவன் மெச்சிக்கொள்ளும் "விலையேறப் பெற்ற நளதம்" இல்லை! என்று இயேசு அவனுக்கு விளக்கினார்:*

> **'உபகாரங்களுக்கு' 'சுகத்திற்கு' ஸ்தோத்திரம் செய்த இவர்கள், துன்பத்தில் 'நொறுங்குண்டு' ஸ்தோத்திரம் செய்ததில்லை! அந்த ஸ்திரீயோ, மிகுதியான கண்ணீரின் மத்தியில் சேகரித்த "அந்த" விலையேறப் பெற்ற நளதம்.... இயேசுவின் பாதத்தை அவள் கண்டு, அவரைத் தொழுது கொள்ளச் செய்து விட்டது!**

*ஆம், அவள் இயேசுவை தரிசித்து, தன் சிரம் தாழ்த்தி, கண்ணீர் ததும்ப முத்தமிட்டு ஆராதனை செய்தாள்! (லூக்கா.7:40).*

*இயேசுவோடு ஐக்கியம் கொண்டு, அவரை ஆராதித்திட நம் யாவருக்கும் "ஓர் பலிபீடம் வேண்டும்!" என்ற எபிரெயர்.13:10 - ம் வசனத்தையே அந்த ஸ்திரீ உறுதி செய்தாள்! நம் ஜீவியத்தில் 'நொறுங்குண்ட' அந்த பலியில்தான், நாம் கர்த்தரை தரிசித்து அவரை ஆராதனை செய்திட முடியும்! என எபிரெயர்.13:15 திட்டமாய் கூறுகிறது! நீங்கள் ஐநூறு அல்லது ஆயிரம் முறை வீட்டில் அமர்ந்து, 'ஸ்தோத்திரம்' சொல்லுவதை, ஸ்தோத்திர பலி எனக் கூறுவது*

"மாணிக்கத்தை... மண்ணாக்கும்" செயலேயாகும்! துன்பத்தின் மத்தியில் "யாதொரு முறுமுறுப்பும், குறைசொல்லும் இல்லாமல்" நொறுங்குண்டு செய்திடும் ஸ்தோத்திரமே, ஸ்தோத்திர பலியாகும்! 'பலி' இல்லாத ஸ்தோத்திரத்தை, இனியும் ஸ்தோத்திர பலி என கூறாதிருங்கள்!

ஒரு ஆண்டில் 365 நாட்கள் நமக்குத் தரப்படுகிறது! மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட நாம், இனியும் ஒரு நாளைக்கூட வீணாக்காமல், துரிதமாய் நம் நளதப் பெட்டியில் "விலையேறப் பெற்ற பரிமள தைலத்தை" சேர்த்திடுவோமாக! **'ஜீவிய பாதையின்' கண்ணீரில் சேகரித்த பரிமள தைலமே,** இயேசுவின் பாதத்தை நனைத்து, தாழப் பணிந்து, அவரை "எங்கும்" ஆராதித்திட நம்மை நடத்தும்!

– T.ரத்தினகுமார்

---

## 'ஜெபம் இல்லாத' கைக்கொள்ளுதல் ஓர் வெறுக்கூடு!

**ந**ம்முடைய ஆண்டவர், தான் நிறைவேற்ற முடியாத ஒரு வாக்குதத்தத்தை நமக்கு ஒருபோதும் தந்ததில்லை! என்பதை நாம் யாவரும் மெய்யாகவே விசுவாசித்திருக்கிறோமா? நாம் மெய்யாகவே விசுவாசித்திருப்போமானால், **நாம் நிறைவேற்ற முடியாத கட்டளைகளை,** நமக்கு அவர் ஒருபோதும் தரமாட்டார் என்பதையும் நாம் விசுவாசித்திருப்போம்! நம் இரட்சகர் நமக்கு அளித்த பிரதானமான மூன்று கட்டளைகள், விசுவாசிகளாகிய நம்மிடத்தில் செயல் பட்டிருக்க வேண்டும்:

1) ஜெபம் பண்ணுங்கள்.....

2) கைக்கொள்ளுங்கள்.....

3) புறப்பட்டுச் செல்லுங்கள்!

கிறிஸ்துவின் நற்கந்த உணர்வோடு இந்த மூன்று கட்டளைகளுக்கும் நாம் கீழ்படிந்திருக்க வேண்டும்! முழு இருதயத்தை நாடும் கிறிஸ்தவர்களுக்கு 'துரதிருஷ்டம்' என்ன தெரியுமா? அவர்களுக்கு உண்டான பிரசங்கிகள் "கைக்கொள்ளுங்கள் .....கைக்கொள்ளுங்கள்" என்ற பிரமாணத்தை திரும்பத்திரும்ப கூறி பாரம் சுமத்துகிறார்கள். **முழு வேதாகமத்திலும் 'கைக்கொள்வது ஒன்றுதான்' பிரதான கட்டளையோ?** என எண்ணும்படி செய்கிறார்கள். இயேசு கட்டளையிட்ட "ஜெபம் பண்ணுங்கள்" என்ற இனிய கட்டளை புறக்கணிக்கப்பட்டது ஏன்? **"ஜெபம்" என்ற வலிமைக்கு அடிபணியாமல்,** கைக்கொள்வதும்.... புறப்பட்டு போவதும் ஆகிய கட்டளைகள், நமக்கு வெற்றுக்கூடாக மாறிவிடும்!

– ஆதி கிறிஸ்தவன்



# இயேசுவின் சீஷன் மத்தேயு,

## தரையில் அறையப்பட்டு தன் குருவிற்கு நற்கந்தமானார்!

(AD 66)

பெத்தானியா கிராமத்து லாசருவைக் குறிப்பிட்டு "லாசரு மரித்துப் போனான்" என இயேசு கூறினார். அச்சமயம் தோமா மற்ற சீஷர்களை நோக்கி "அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்" என்றான் (யோவான்.11:14,16). எல்லா சீஷர்களும் உடனே பெத்தானியாவிற்குச் சென்றார்கள்! இவ்வித ஆயத்தம், இந்த பதினொரு சீஷர்களும் ஒன்றன்பின் ஒருவராக கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாய் மரிப்பதற்கு ஓர் தீர்க்கதரிசன வசனமாய் மாறியது.

காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியில், இயேசு கூறியபடியே எல்லா சீஷர்களும் அவரை விட்டு ஓடிபோய் விட்டார்கள். ஆகிலும், கிறிஸ்து உயிர்த்தெழுந்து பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு, இந்த சீஷர்கள் அனைவரும் தங்கள் ஆண்டவருக்கு வல்லமையான சாட்சிகளாய் மாறினார்கள்! இவர்கள் அனைவரும் இயேசுவே மெய்யான மேசியா என்றும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்றும் திட்டமாய் அறிந்திருந்தார்கள். அவருடைய திவ்விய போதனைகளையும், செய்த அற்புதங்களையும், அவரது உயிர்த்தெழுதலையும் இந்த சீஷர்கள், கண்ணாரக் கண்டவர்கள்.

கிறிஸ்துவின் வல்ல சாட்சியாய் விளங்கிய சீஷன் மத்தேயு எருசலேமில் இருக்கும்போதே, தன்னுடைய சுவிசேஷத்தை யூதர்களுக்கு எபிரெய மொழியில் எழுதினார். தங்கள் குருவின் கட்டளைப்படி இந்த சீஷர்கள் பல்வேறு நாடுகளுக்கு, உலகமெங்கும் சென்றார்கள். இந்த மத்தேயு எத்தியோப்பியா தேசத்திற்கு சென்றார். அங்கு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை 'அற்புத அடையாளத்தோடு' மிக வல்லமையாய் பிரசங்கித்தார். அப்போது எத்தியோப்பியா இராஜாவாய் இருந்த ஏகிளிப்பஸ் கிறிஸ்தவர்களை அங்கீகரித்து, கிறிஸ்துவின் போதகங்கள் செழித்து வளர உதவி செய்தார். ஏகிளிப்பஸ் மரணத்திற்கு பிறகு ஹிடாகஸ் என்ற கிறிஸ்துவுக்கு விரோதமான ஓர் கொடிய அரசன் ஆட்சி புரிந்தான். சீஷன் மத்தேயு உருவாக்கி எழுப்பி இருந்த ஆலயத்தில் வல்லமையாய் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, ஹிடாகஸ் அவரை கைது செய்தான்! பிரசங்க மேடையிலிருந்து ஆலய வாசலுக்கு ஒரு சங்கிலியால் அவரை இழுத்துக் கொண்டு வந்தார்கள். ஆலயத்திற்கு வெளியே தரையில் அவரைத் தள்ளி, உயரம் குறைவான ஈட்டிகளால் அவரை தரையோடு தரையாக அறைந்து, முடிவில் அவர் தலையை வெட்டிக் கொன்றார்கள்! அவரது இரத்த சாட்சி, அவர் எழுதிய மத்தேயு சுவிசேஷத்திற்கு என்றென்றுமான உயிருள்ள சாட்சியாய் மாறியது!

- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்

## வாலிபனே, தோல்வியின் பின்னணியிலும் 'இரட்சிப்பு' உண்டு!

மங்கோலியா முழுவதையும் ஜெயித்து சீனாவின் பெரும் பகுதியையும் தனது ஆதிக்கத்துக்குள் வைத்திருந்த மங்கோலிய தளபதி கிங்கிஸ்கானை குறித்த ஒரு நிகழ்ச்சி அவனது டயரியில் எழுதப்பட்டுள்ளது. இந்த கிங்கிஸ்கான் ஒரு கழுகை செல்லமாக வளர்த்தான்.

ஒரு கானக வேட்டையின் போது தன்னோடு அந்த கழுகை எடுத்துச் சென்றான். கானகத்தில் வேட்டையாடிய கிங்கிஸ்கான் மிகவும் தாகம் அடைந்தான். அவனது தாகம் தீர்க்க தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியாக, ஒரு மலை பாறை இடுக்கில் கசிந்த தண்ணீரை, ஒரு குவளையைக் கொண்டு சேகரித்து தனது வாய்க்கு நேராக குடிப்பதற்கு முயற்சித்தப் போது அவனது செல்லக் கழுகு பறந்து வந்து அந்த குவளையை இறக்கையால் அடித்து தட்டிவிட்டது. கிங்கிஸ்கான் கோபமடைந்து கழுகைத் துரத்திவிட்டான்.

அக்கழுகு இவ்வாறு மூன்று முறை கொட்டிவிட்டது! கோபம் கொண்ட அவன் "அடுத்த முறை நீ தண்ணீர் குவளையை தட்டும் பட்சத்தில் நான் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று கூறிய பின்னர் சொட்டு, சொட்டாக வடிந்த தண்ணீரைப் பிடித்து குடிப்பதற்காக வாய் அருகில் கொண்டு சென்றதும் அவனது செல்ல கழுகு சீறிப்பாய்ந்து குவளையை ஓங்கி அடித்து வீழ்த்தி விட்டது. கோபம் கொண்ட மாவீரன் கிங்கிஸ்கான் அடுத்த கணமே தனது கூரிய வாளால் தனது அன்புக்குரிய கழுகை துண்டு துண்டாக வெட்டி வீழ்த்திவிட்டான். இரத்த வெள்ளத்தில் கழுகு உயிர் பிரிந்தது!

கடும் தாகம் கொண்ட தளபதி தனது குவளையை எடுத்துத் தண்ணீர் கசிந்து வரும் பாறைக்குச் சென்று அங்குள்ள சிறிய நீர்க்குழியை கண்டு அதிலிருந்து தண்ணீரை எடுக்க முயன்றபோது, அந்த நீர்க்குழியில் ஒரு கொடிய விஷம் நிறைந்த பெரிய கருந்தேள் செத்து மிதப்பதைக் கண்டான். அந்த நீரை அவன் பருகியிருந்தால் அவனுக்கு மரணம் நிச்சயம் ஏற்பட்டிருக்கும். அப்படியான கொடிய விஷ தேள் அது. தன்னை காப்பாற்றி மடிந்த கழுகை பார்த்தான்! கழுகு இனி உயிர் பெற்று வருவது எங்ஙனம்?

வாலிபனே, மூன்று தடவைகள் அந்த கழுகு தனது இறக்கையால் தட்டிக் கவிழ்த்தது போல உனது வாழ்வின் பொன்னான தருணங்கள் தட்டிக் கவிழ்க்கப்பட்டு பயனற்று போய்விட்டது என்று எண்ணுகின்றாயா? தட்டிக் கவிழ்க்கப்பட்டதின் பின்னணியத்தில் உள்ள காரணத்தை, உன்னை தமக்கென ஆட்கொள்ள விரும்பும் நல்ல தேவன் அறிவார். அந்த காரணத்தில், ஒரு மிக முக்கியமானது "உன்னுடைய இரட்சிப்பு". உலக வாழ்க்கையில் நீ சிக்கி மாளாதபடி, தோல்விகளை அனுமதித்த நல்ல ஆண்டவரிடம் இன்றே மனந்திரும்பி, சோர்வுகள் அகற்றி இரட்சகரை கண்டடைவாயாக!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.